முருகப்பெருமான் துணை

**மகான் அப்பூதியடிகளார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.06.2022**, வியாழக்கிழமை

1. சற்குருவாக வந்து அருளும்
சடாட்சரனின் மகா சொரூபமே
அற்புதம் நிகழ்த்திடும் ஞானியே
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது மிதுனதிங்கள்
குறைவிலா நவதிகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 09 நாள், 23.06.2022 வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு அப்பூதியடிகளார் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உண்மைபட சரணாகதி தன்னை
ஞானவழி மக்கள் கொண்டிட
ஞானகுரு எல்லாமும் ஆக
4. ஆகவே துணைநின்று காக்க
அனுகுவார் வாழ்க்கை தன்னில்
பகைபலன் இடைகண்டமோ
பாதுகாப்பிலா துன்பம் ஏதும் அனுகா
5. அனுகாத தடுப்புநிலை கூடி
அவரவர் வாழ்வில் அமைதி
ஆனந்தமுற தேவை பூர்த்தி
ஆயுள் கீர்த்தி அதிவளம் காணும்
6. காணவே உடல் பொருள் ஆவி
கலக்கமிலா பூரணமாகத்தானும்
தானாக குருவழி சமர்ப்பணம்
தந்தேன் முழுமைபட என வந்த
7. வந்த மக்களின் வாழ்வில்
வறுமை வஞ்சம் பழிபாவம்
எந்தவகையிலும் அனுகா மீட்பு
எக்காலமும் மகிழ்வு குன்றா வண்ணம்
8. வண்ணமுடன் நிலைகள் தேறி
வருங்காலத்தின் மேல் எந்த பயமும்
எண்ணம்வழி வாரா தேறி
எல்லா வளமும் கண்டு சிறப்பர்
9. சிறப்பான அறிவுத் தெளிவு
சித்திகளும் கைவரும்படி
அறத்தின் வழியும் நடந்து
அரங்கமகான் ஆசி பலம் தன்னால்

10. தன்னிலே ஞானவான்களாக
தருமவான்களாகவும் மாறி
மண்ணுலகை காக்கும் மீட்கும்
மகா சக்திகளாகவே மாறுவர்

11. மாறுதல் தரவல்ல கலியுக ஞானி
மரணம் வெல்லும் மகாஞானி
ஆறுமுக அரங்கன் ஆறுதல் பெற
அகிலமே பெருமாற்றம் காணும்
அருளாசி முற்றே

–சுபம்–